ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருநறையூர்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருநறையூர்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் || **1** ||

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் || **2** ||

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் |
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் || **3** ||

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு'ணாய மேநே |
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே || **4** ||

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் |
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா || **5** ||

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் |
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் || **6** ||

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – அன்றாயர்

‡ அன்றாயர் குலக் கொடியோடு ⋆
அணி மா மலர் மங்கையொடன்பளவி ⋆
அவுணர்க்கென்றானும் இரக்கம் இலாதவனுக்கு ⋆
உறையும் இடம் ஆவது ⋆
இரும் பொழில் சூழ் நன்றாய புனல் நறையூர் திருவாலி குடந்தை ⋆
தடம் திகழ் கோவல் நகர் ⋆
நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கிடம் ⋆
மா மலை ஆவது நீர் மலையே ‖ **2.4.1** ‖

## பெரிய திருமொழி – நும்மைத் தொழுதோம்

‡ சிந்தை தன்னுள் நீங்காதிருந்த திருவே ! ⋆
மருவினிய மைந்தா ⋆
அந்தண் ஆலி மாலே ! ⋆
சோலை மழ களிறே ! ⋆
நந்தா விளக்கின் சுடரே ! ⋆
நறையூர் நின்ற நம்பீ ⋆

என் எந்தாய் ! இந்தளூராய் ! ⋆
அடியேற்கிறையும் இரங்காயே ! ‖ **4.9.2** ‖

### பெரிய திருமொழி – துறப்பேன்

மானேய் நோக்கு நல்லார் ⋆
மதி போல் முகத்துலவும் ⋆
ஊனேய் கண் வாளிக்கு ⋆
உடைந்தோட்டந்துன் அடைந்தேன் ⋆
கோனே ! குறுங்குடியுள் குழகா ! ⋆
திருநறையூர்த் தேனே ⋆
வரு புனல் சூழ் ⋆
திருவிண்ணகரானே ‖ **6.3.3** ‖

### பெரிய திருமொழி – கண்ணும் சுழன்று

‡ கண்ணும் சுழன்று பீளையோடு ⋆
ஈளை வந்தேங்கினால் ⋆
பண்ணின் மொழியார் ⋆
பைய நடமின் என்னாத முன் ⋆
விண்ணும் மலையும் ⋆
வேதமும் வேள்வியும் ஆயினான் ⋆
நண்ணு நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ‖ **6.4.1** ‖

கொங்குண் குழலார் ⋆
கூடி இருந்து சிரித்து ⋆
நீரிங்கென் இருமி ⋆
எம்பால் வந்ததென்றிகழாத முன் ⋆

திங்கள் எரி கால் ⋆
செஞ்சுடர் ஆயவன் தேசுடை ⋆
நங்கள் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ‖ **6.4.2** ‖

கொங்கார் குழலார் ⋆
கூடி இருந்து சிரித்து ⋆
எம்மை எம் கோலம் ஐயா ! ⋆
என் இனிக் காண்பதென்னாத முன் ⋆
செங்கோல் வலவன் ⋆
தான் பணிந்தேத்தித் திகழும் ஊர் ⋆
நம் கோன் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ‖ **6.4.3** ‖

கொம்பும் அரவமும் ⋆
வல்லியும் வென்ற நுண் ஏர் இடை ⋆
வம்புண் குழலார் ⋆
வாசல் அடைத்திகழாத முன் ⋆
செம் பொன் கமுகினம் ⋆
தான் கனியும் செழும் சோலை சூழ் ⋆
நம்பன் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ‖ **6.4.4** ‖

விலங்கும் கயலும் ⋆
வேலும் ஒண் காவியும் வென்ற கண் ⋆
சலம் கொண்ட சொல்லார் ⋆
தாங்கள் சிரித்திகழாத முன் ⋆
மலங்கும் வராலும் ⋆

வாளையும் பாய் வயல் சூழ் தரு ⋆
நலம் கொள் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ॥ **6.4.5** ॥

மின் நேர் இடையார் ⋆
வேட்கையை மாற்றி இருந்து ⋆
என் நீர் இருமி ⋆
எம்பால் வந்ததென்றிகழாத முன் ⋆
தொன்னீர் இலங்கை மலங்க ⋆
விலங்கெரி ஊட்டினான் ⋆
நன்னீர் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ॥ **6.4.6** ॥

வில் ஏர் நுதலார் ⋆
வேட்கையை மாற்றிச் சிரித்து ⋆
இவன் பொல்லான் திரைந்தான் என்னும் ⋆
புறன் உரை கேட்பதன் முன் ⋆
சொல் ஆர் மறை நான்கோதி ⋆
உலகில் நிலாயவர் ⋆
நல்லார் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ॥ **6.4.7** ॥

வாள் ஒண் கண் நல்லார் தாங்கள் ⋆
மதனன் என்றார் தம்மை ⋆
கேண்மிண்கள் ஈளையோடு ⋆
ஏங்கு கிழவன் என்னாத முன் ⋆
வேள்வும் விழவும் ⋆
வீதியில் என்றும் அறாத ஊர் ⋆

நாளும் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ॥ **6.4.8** ॥

கனி சேர்ந்திலங்கு நல் வாயவர் ⋆
காதன்மை விட்டிட ⋆
குனி சேர்ந்துடலம் ⋆
கோலில் தளர்ந்திளையாத முன் ⋆
பனி சேர் விசும்பில் ⋆
பால் மதி கோள் விடுத்தான் இடம் ⋆
நனி சேர் நறையூர் ⋆
நாம் தொழுதும் எழு நெஞ்சமே ॥ **6.4.9** ॥

‡ பிறை சேர் நுதலார் ⋆
பேணுதல் நம்மை இலாத முன் ⋆
நறை சேர் பொழில் சூழ் ⋆
நறையூர் தொழு நெஞ்சமே ! என்ற ⋆
கறை ஆர் நெடு வேல் மங்கையர் கோன் ⋆
கலிகன்றி சொல் ⋆
மறவாதுரைப்பவர் ⋆
வானவர்க்கின் அரசாவாரே ॥ **6.4.10** ॥

## பெரிய திருமொழி – கலங்க

‡ கலங்க முந்நீர் கடைந்து ⋆
அமுதம் கொண்டு ⋆
இமையோர் துலங்கல் தீர ⋆
நல்கு சோதிச் சுடராய ⋆
வலங்கை ஆழி இடங்கைச் சங்கம் ⋆
உடையான் ஊர் ⋆

நலம் கொள் வாய்மை ⋆
அந்தணர் வாழும் நறையூரே ॥ **6.5.1** ॥

முனை ஆர் சீயம் ஆகி ⋆
அவுணன் முரண் மார்வம் ⋆
புனை வாள் உகிரால் ⋆
போழ் பட ஈர்ந்த புனிதன் ஊர் ⋆
சினை ஆர் தேமாம் செம் தளிர் கோதிக் ⋆
குயில் கூவும் ⋆
நனை ஆர் சோலை சூழ்ந்து ⋆
அழகாய நறையூரே ॥ **6.5.2** ॥

ஆனைப் புரவி ⋆
தேரொடு காலாள் அணி கொண்ட ⋆
சேனைத் தொகையைச் சாடி ⋆
இலங்கை செற்றான் ஊர் ⋆
மீனைத் தழுவி வீழ்ந்தெழும் ⋆
மள்ளர்க்கலமந்து ⋆
நானப் புதலில் ⋆
ஆமை ஒளிக்கும் நறையூரே ॥ **6.5.3** ॥

உறி ஆர் வெண்ணெய் உண்டு ⋆
உரலோடும் கட்டுண்டு ⋆
வெறி ஆர் கூந்தல் பின்னை பொருட்டு ⋆
ஆன் வென்றான் ஊர் ⋆
பொறி ஆர் மஞ்ஞை ⋆
பூம் பொழில் தோறும் நடம் ஆட ⋆

நறு நாண் மலர் மேல் ⋆
வண்டிசை பாடும் நறையூரே ॥ **6.5.4** ॥

விடை ஏழ் வென்று ⋆
மென் தோள் ஆய்ச்சிக்கன்பன் ஆய் ⋆
நடையால் நின்ற ⋆
மருதம் சாய்த்த நாதன் ஊர் ⋆
பெடையோடன்னம் ⋆
பெய்வளை ஆர் தம் பின் சென்று ⋆
நடையோடியலி ⋆
நாணி ஒளிக்கும் நறையூரே ॥ **6.5.5** ॥

பகு வாய் வன் பேய் கொங்கை சுவைத்து ⋆
ஆர் உயிர் உண்டு ⋆
புகு வாய் நின்ற ⋆
போதகம் வீழப் பொருதான் ஊர் ⋆
நெகு வாய் நெய்தல் ⋆
பூ மது மாந்திக் கமலத்தின் ⋆
நகு வாய் மலர் மேல் ⋆
அன்னம் உறங்கும் நறையூரே ॥ **6.5.6** ॥

முந்து நூலும் முப்புரி நூலும் ⋆
முன் ஈந்த ⋆
அந்தணாளன் பிள்ளையை ⋆
அஞ்ஞான்றளித்தான் ஊர் ⋆
பொந்தில் வாழும் ⋆
பிள்ளைக்காகிப் புள் ஓடி ⋆

நந்து வாரும் ⋆
பைம் புனல் வாவி நறையூரே ॥ **6.5.7** ॥

வெள்ளைப் புரவித் தேர் விசயற்காய் ⋆
விறல் வியூகம் விள்ள ⋆
சிந்துக்கோன் விழ ⋆
ஊர்ந்த விமலன் ஊர் ⋆
கொள்ளைக் கொழு மீன் உண் ⋆
குருகோடிப் பெடையோடும் ⋆
நள்ளக் கமலத் தேறல் உகுக்கும் ⋆
நறையூரே ॥ **6.5.8** ॥

பாரை ஊரும் பாரம் தீரப் ⋆
பார்த்தன் தன் தேரை ஊரும் ⋆
தேவதேவன் சேரும் ஊர் ⋆
தாரை ஊரும் ⋆
தண் தளிர் வேலி புடை சூழ ⋆
நாரை ஊரும் ⋆
நல் வயல் சூழ்ந்த நறையூரே ॥ **6.5.9** ॥

‡ தாமத் துளப ⋆
நீள் முடி மாயன் தான் நின்ற ⋆
நாமத் திரள் மா மாளிகை சூழ்ந்த ⋆
நறையூர் மேல் ⋆
காமக் கதிர் வேல் வல்லான் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
சேமத் துணையாம் ⋆
செப்பும் அவர்க்குத் திருமாலே ॥ **6.5.10** ॥

## பெரிய திருமொழி - அம்பரமும்

‡ அம்பரமும் பெரு நிலனும் திசைகள் எட்டும் ⋆
அலை கடலும் குல வரையும் உண்ட கண்டன் ⋆
கொம்பமரும் வட மரத்தின் இலை மேல் பள்ளி கூடினான் ⋆
திருவடியே கூடுகிற்பீர் ⋆
வம்பவிழும் செண்பகத்தின் வாசம் உண்டு ⋆
மணி வண்டு வகுளத்தின் மலர் மேல் வைகு ⋆
செம்பியன் கோச் செங்கணான் சேர்ந்த கோயில் ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ॥ **6.6.1** ॥

கொழுங்கயலாய் நெடு வெள்ளம் கொண்ட காலம் ⋆
குல வரையின் மீதோடி அண்டத்தப்பால் ⋆
எழுந்தினிது விளையாடும் ஈசன் எந்தை ⋆
இணை அடிக்கீழ் இனிதிருப்பீர் ! இன வண்டாலும் ⋆
உழும் செறுவில் மணி கொணர்ந்து கரை மேல் சிந்தி ⋆
உலகெல்லாம் சந்தனமும் அகிலும் கொள்ள ⋆
செழும் பொன்னி வளம் கொடுக்கும் சோழன் சேர்ந்த ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ॥ **6.6.2** ॥

பவ்வ நீர் உடை ஆடை ஆகச் சுற்றிப் ⋆
பார் அகலம் திருவடியாப் பவனம் மெய்யா ⋆
செவ்வி மாதிரம் எட்டும் தோளா ⋆
அண்டம் திரு முடியா நின்றான் பால் செல்லுகிற்பீர் ⋆
கவ்வை மா களிறுந்தி விண்ணி ஏற்ற ⋆
கழல் மன்னர் மணி முடி மேல் காகம் ஏற ⋆
தெய்வ வாள் வலம் கொண்ட சோழன் சேர்ந்த ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ॥ **6.6.3** ॥

பைங்கண் ஆள் அரி உருவாய் வெருவ நோக்கிப் ⋆
பரு வரைத் தோள் இரணியனைப் பற்றி வாங்கி ⋆
அங்கை வாள் உகிர் நுதியால் அவனதாகம் ⋆
அங்குருதி பொங்குவித்தான் அடிக்கீழ் நிற்பீர் ⋆
வெங்கண் மா களிறுந்தி விண்ணி ஏற்ற ⋆
விறல் மன்னர் திறல் அழிய வெம்மா உய்த்த ⋆
செங்கணான் கோச் சோழன் சேர்ந்த கோயில் ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ‖ **6.6.4** ‖

அன்றுலக மூன்றினையும் அளந்து ⋆
வேறோர் அரி உருவாய் இரணியனதாகம் கீண்டு ⋆
வென்றவனை விண் உலகில் செல உய்த்தாற்கு ⋆
விருந்தாவீர் ! மேல் எழுந்து விலங்கல் பாய்ந்து ⋆
பொன் சிதறி மணி கொணர்ந்து கரை மேல் சிந்திப் ⋆
புலம் பரந்து நிலம் பரக்கும் பொன்னி நாடன் ⋆
தென் தமிழன் வட புலக்கோன் சோழன் சேர்ந்த ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ‖ **6.6.5** ‖

தன்னாலே தன் உருவம் பயந்த தானாய் ⋆
தயங்கொளி சேர் மூவுலகும் தானாய் வானாய் ⋆
தன்னாலே தன் உருவின் மூர்த்தி மூன்றாய்த் ⋆
தான் ஆயன் ஆயினான் சரண் என்றுய்வீர் ⋆
மின் ஆடு வேல் ஏந்து விளைந்த வேளை ⋆
விண்ணேறத் தனி வேல் உய்த்துலகம் ஆண்ட ⋆
தென் நாடன் குட கொங்கன் சோழன் சேர்ந்த ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ‖ **6.6.6** ‖

முலைத் தடத்த நஞ்சுண்டு துஞ்சப் பேய்ச்சி ⋆
முது துவரைக் குலபதியாக் காலிப் பின்னே ⋆
இலைத் தடத்த குழல் ஊதி ஆயர் மாதர் ⋆
இன வளை கொண்டான் அடிக்கீழ் எய்துகிற்பீர் ⋆
மலைத் தடத்த மணி கொணர்ந்து வையம் உய்ய ⋆
வளம் கொடுக்கும் வரு புனலம் பொன்னி நாடன் ⋆
சிலைத் தடக்கைக் குலச் சோழன் சேர்ந்த கோயில் ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ॥ **6.6.7** ॥

முருக்கிலங்கு கனித் துவர் வாய்ப் பின்னை கேள்வன் ⋆
மன் எல்லாம் முன் அவியச் சென்று ⋆
வென்றிச் செருக்களத்துத் திறல் அழியச் செற்ற வேந்தன் ⋆
சிரம் துணித்தான் திருவடி நும் சென்னி வைப்பீர் ⋆
இருக்கிலங்கு திருமொழி வாய் எண் தோள் ஈசற்கு ⋆
எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட ⋆
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில் ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ॥ **6.6.8** ॥

தார் ஆளன் தண் அரங்க ஆளன் ⋆
பூமேல் தனியாளன் முனியாளர் ஏத்த நின்ற பேர் ஆளன் ⋆
ஆயிரம் பேர் உடைய ஆளன் ⋆
பின்னைக்கு மணவாளன் பெருமை கேட்பீர் ⋆
பார் ஆளர் இவர் இவர் என்றழுந்தை ஏற்ற ⋆
படை மன்னர் உடல் துணியப் பரிமா உய்த்த ⋆
தேர் ஆளன் கோச் சோழன் சேர்ந்த கோயில் ⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே ॥ **6.6.9** ॥

‡ செம் மொழி வாய் நால் வேத வாணர் வாழும் ⋆
திருநறையூர் மணிமாடச் செங்கண் மாலை ⋆
பொய்ம் மொழி ஒன்றில்லாத மெய்ம்மை ஆளன் ⋆
புல மங்கை குல வேந்தன் புலமை ஆர்ந்த ⋆
அம்மொழி வாய்க் கலிகன்றி இன்பப் பாடல் பாடுவார் ⋆
வியன் உலகில் நமனார் பாடி ⋆
வெம் மொழி கேட்டஞ்சாதே மெய்ம்மை சொல்லில் ⋆
விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந் தக்கோரே ॥ **6.6.10** ॥

## பெரிய திருமொழி – ஆளும் பணியும்

‡ ஆளும் பணியும் அடியேனைக் கொண்டான் ⋆
விண்ட நிசாசரரை ⋆
தோளும் தலையும் துணிவெய்தச் ⋆
சுடு வெஞ்சிலை வாய்ச் சரம் துரந்தான் ⋆
வேளும் சேயும் அனையாரும் ⋆
வேற்கணாரும் பயில் வீதி ⋆
நாளும் விழவின் ஒலி ஓவா ⋆
நறையூர் நின்ற நம்பியே ॥ **6.7.1** ॥

முனி ஆய் வந்து மூ எழு கால் ⋆
முடி சேர் மன்னர் உடல் துணிய ⋆
தனி வாய் மழுவின் படை ஆண்ட ⋆
தாரார் தோளான் வார் புறவில் ⋆
பனி சேர் முல்லை பல் அரும்ப ⋆
பானல் ஒரு பால் கண் காட்ட ⋆
நனி சேர் கமலம் முகம் காட்டும் ⋆
நறையூர் நின்ற நம்பியே ॥ **6.7.2** ॥

தெள் ஆர் கடல் வாய் விட வாயச் ⋆
சின வாள் அரவில் துயில் அமர்ந்து ⋆
துள்ளா வரு மான் வீழ ⋆
வாளி துரந்தான் இரந்தான் மாவலி மண் ⋆
புள் ஆர் புறவில் பூங்காவி ⋆
புலன் கொள் மாதர் கண் காட்ட ⋆
நள் ஆர் கமலம் முகம் காட்டும் ⋆
நறையூர் நின்ற நம்பியே ॥ **6.7.3** ॥

ஒளியா வெண்ணெய் உண்டான் என்று ⋆
உரலோடாய்ச்சி ஒண் கயிற்றால் ⋆
விளியா ஆர்க்க ஆப்புண்டு ⋆
விம்மி அழுதான் மென் மலர் மேல் ⋆
களியா வண்டு கள் உண்ணக் ⋆
காமர் தென்றல் அலர் தூற்ற ⋆
நளிர் வாய் முல்லை முறுவலிக்கும் ⋆
நறையூர் நின்ற நம்பியே ॥ **6.7.4** ॥

வில் ஆர் விழவில் வட மதுரை ⋆
விரும்பி விரும்பா மல் அடர்த்து ⋆
கல் ஆர் திரள் தோள் கஞ்சனைக் காய்ந்தான் ⋆
பாய்ந்தான் காளியன் மேல் ⋆
சொல் ஆர் சுருதி முறை ஓதிச் ⋆
சோமுச் செய்யும் தொழிலினோர் ⋆
நல் ஆர் மறையோர் பலர் வாழும் ⋆
நறையூர் நின்ற நம்பியே ॥ **6.7.5** ॥

வள்ளி கொழுநன் முதலாய ⋆
மக்களோடு முக்கணான் வெள்கி ஓட ⋆
விறல் வாணன் ⋆
வியந் தோள் வனத்தைத் துணித்துகந்தான் ⋆
பள்ளி கமலத்திடைப் பட்ட ⋆
பகு வாய் அலவன் முகம் நோக்கி ⋆
நள்ளி ஊடும் வயல் சூழ்ந்த ⋆
நறையூர் நின்ற நம்பியே ‖ **6.7.6** ‖

மிடையா வந்த வேல் மன்னர் வீய ⋆
விசயன் தேர் கடவி ⋆
குடையா வரை ஒன்றெடுத்து ⋆
ஆயர் கோவாய் நின்றான் கூர் ஆழிப் படையான் ⋆
வேதம் நான்கைந்து வேள்வி ⋆
அங்கம் ஆறிசை ஏழ் ⋆
நடையா வல்ல அந்தணர் வாழ் ⋆
நறையூர் நின்ற நம்பியே ‖ **6.7.7** ‖

பந்தார் விரலாள் பாஞ்சாலி ⋆
கூந்தல் முடிக்கப் பாரதத்து ⋆
கந்தார் களிற்றுக் கழல் மன்னர் கலங்கச் ⋆
சங்கம் வாய் வைத்தான் ⋆
செந்தாமரை மேல் அயனோடு ⋆
சிவனும் அனைய பெருமையோர் ⋆
நந்தா வண் கை மறையோர் வாழ் ⋆
நறையூர் நின்ற நம்பியே ‖ **6.7.8** ‖

ஆறும் பிறையும் அரவமும் ⋆
அடம்பும் சடை மேல் அணிந்து ⋆
உடலம் நீறும் பூசி ஏறூரும் ⋆
இறையோன் சென்று குறை இரப்ப ⋆
மாறொன்றில்லா வாச நீர் ⋆
வரை மார்பகலத்தளித்துகந்தான் ⋆
நாறும் பொழில் சூழ்ந்தழகாய ⋆
நறையூர் நின்ற நம்பியே ॥ **6.7.9** ॥

‡ நன்மை உடைய மறையோர் வாழ் ⋆
நறையூர் நின்ற நம்பியை ⋆
கன்னி மதில் சூழ் வயல் மங்கைக் ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை ⋆
பன்னி உலகில் பாடுவார் ⋆
பாடு சாரா பழ வினைகள் ⋆
மன்னி உலகம் ஆண்டு போய் ⋆
வானோர் வணங்க வாழ்வாரே ॥ **6.7.10** ॥

## பெரிய திருமொழி – மான் கொண்ட

‡ மான் கொண்ட தோல் ⋆
மார்வின் மாணி ஆய் ⋆
மாவலி மண் தான் கொண்டு ⋆
தாளால் அளந்த பெருமானை ⋆
தேன் கொண்ட சாரல் ⋆
திருவேங்கடத்தானை ⋆
நான் சென்று நாடி ⋆
நறையூரில் கண்டேனே ॥ **6.8.1** ॥

முந்நீரை முன் நாள் ⋆
கடைந்தானை ⋆
மூழ்த்த நாள் அந்நீரை மீனாய் ⋆
அமைத்த பெருமானை ⋆
தென்னாலி மேய ⋆
திருமாலை எம்மானை ⋆
நன்னீர் வயல் சூழ் ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.2** ‖

தூ வாய புள் ஊர்ந்து வந்து ⋆
துறை வேழம் ⋆
மூவாமை நல்கி ⋆
முதலை துணித்தானை ⋆
தேவாதி தேவனைச் ⋆
செங்கமலக் கண்ணானை ⋆
நாவா உளானை ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.3** ‖

ஓடா அரியாய் ⋆
இரணியனை ஊன் இடந்த ⋆
சேடார் பொழில் சூழ் ⋆
திருநீர் மலையானை ⋆
வாடா மலர்த் துழாய் ⋆
மாலை முடியானை ⋆
நாள் தோறும் நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.4** ‖

கல் ஆர் மதில் சூழ் ⋆
கடி இலங்கைக் கார் அரக்கன் ⋆
வல் ஆகம் கீள ⋆
வரி வெஞ்சரம் துரந்த வில்லானை ⋆
செல்வ விபீடணற்கு ⋆
வேறாக ⋆
நல்லானை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.5** ‖

உம்பர் உலகோடு ⋆
உயிர் எல்லாம் ⋆
உந்தியில் வம்பு மலர் மேல் ⋆
படைத்தானை மாயோனை ⋆
அம்பன்ன கண்ணாள் ⋆
அசோதை தன் சிங்கத்தை ⋆
நம்பனை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.6** ‖

கட்டேறு நீள் சோலைக் ⋆
காண்டவத்தைத் தீ மூட்டி விட்டானை ⋆
மெய்யம் அமர்ந்த பெருமானை ⋆
மட்டேறு கற்பகத்தை ⋆
மாதர்க்காய் ⋆
வண் துவரை நட்டானை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.7** ‖

மண்ணின் மீ பாரம் கெடுப்பான் ⋆
மற மன்னர் ⋆

பண்ணின் மேல் வந்த ⋆
படை எல்லாம் பாரதத்து ⋆
விண்ணின் மீதேற ⋆
விசயன் தேர் ஊர்ந்தானை ⋆
நண்ணி நான் நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.8** ‖

‡ பொங்கேறு நீள் சோதிப் ⋆
பொன் ஆழி தன்னோடும் ⋆
சங்கேறு கோலத் ⋆
தடக் கைப் பெருமானை ⋆
கொங்கேறு சோலைக் ⋆
குடந்தைக் கிடந்தானை ⋆
நங்கோனை நாடி ⋆
நறையூரில் கண்டேனே ‖ **6.8.9** ‖

‡ மன்னு மதுரை ⋆
வசுதேவர் வாழ் முதலை ⋆
நன்னறையூர் ⋆
நின்ற நம்பியை ⋆
வம்பவிழ் தார்க் கன்னவிலும் தோளான் ⋆
கலியன் ஒலி வல்லார் ⋆
பொன் உலகில் வானவர்க்குப் ⋆
புத்தேளிர் ஆகுவரே ‖ **6.8.10** ‖

## பெரிய திருமொழி – பெடையடர்த்த

‡ பெடை அடர்த்த மட அன்னம் ⋆
பிரியாது ⋆

மலர்க் கமலம் மடல் எடுத்து மது நுகரும் ⋆
வயல் உடுத்த திருநறையூர் ⋆
முடை அடர்த்த சிரம் ஏந்தி ⋆
மூவுலகும் பலி திரிவோன் ⋆
இடர் கெடுத்த திருவாளன் ⋆
இணை அடியே அடை நெஞ்சே ! ‖ **6.9.1** ‖

கழி ஆரும் கன சங்கம் ⋆
கலந்தெங்கும் நிறைந்தேறி ⋆
வழி ஆர முத்தீன்று ⋆
வளம் கொடுக்கும் திருநறையூர் ⋆
பழி ஆரும் விறல் அரக்கன் ⋆
பரு முடிகள் அவை சிதற ⋆
அழல் ஆறும் சரம் துரந்தான் ⋆
அடி இணையே அடை நெஞ்சே ! ‖ **6.9.2** ‖

சுளை கொண்ட பலங்கனிகள் ⋆
தேன் பாய ⋆
கதலிகளின் திளை கொண்ட பழம் கெழுமுத் ⋆
திகழ் சோலைத் திருநறையூர் ⋆
வளை கொண்ட வண்ணத்தன் ⋆
பின் தோன்றல் ⋆
மூவுலகோடளை வெண்ணெய் உண்டான் தன் ⋆
அடி இணையே அடை நெஞ்சே ! ‖ **6.9.3** ‖

துன்றோளித் துகிற் படலம் ⋆
துன்னி எங்கும் மாளிகை மேல் ⋆
நின்றார வான் மூடும் ⋆

நீள் செல்வத் திருநறையூர் ⋆
மன்றாரக் குடம் ஆடி ⋆
வரை எடுத்து மழை தடுத்த ⋆
குன்றாரும் திரள் தோளன் ⋆
குரை கழலே அடை நெஞ்சே ! ‖ **6.9.4** ‖

அகிற்குறடும் சந்தனமும் ⋆
அம் பொன்னும் அணி முத்தும் ⋆
மிகக் கொணர்ந்து திரை உந்தும் ⋆
வியன் பொன்னித் திருநறையூர் ⋆
பகல் கரந்த சுடர் ஆழிப் படையான் ⋆
இவ்வுலகேழும் ⋆
புகக் கரந்த திரு வயிற்றன் ⋆
பொன் அடியே அடை நெஞ்சே ! ‖ **6.9.5** ‖

பொன் முத்தும் அரி உகிரும் ⋆
புழைக் கைம் மா கரிக் கோடும் ⋆
மின்னத் தண் திரை உந்தும் ⋆
வியன் பொன்னித் திருநறையூர் ⋆
மின் ஒத்த நுண் மருங்குல் ⋆
மெல் இயலைத் ⋆
திரு மார்பில் மன்னத் தான் வைத்துகந்தான் ⋆
மலர் அடியே அடை நெஞ்சே ! ‖ **6.9.6** ‖

சீர் தழைத்த கதிர்ச் செந்நெல் ⋆
செங்கமலத்திடை இடையின் ⋆
பார் தழைத்துக் கரும்போங்கிப் ⋆
பயன் விளைக்கும் திருநறையூர் ⋆

கார் தழைத்த திரு உருவன் ⋆
கண்ண பிரான் விண்ணவர் கோன் ⋆
தார் தழைத்த துழாய் முடியன் ⋆
தளிர் அடியே அடை நெஞ்சே ! ॥ **6.9.7** ॥

‡ குலை ஆர்ந்த பழுக் காயும் ⋆
பசுங்காயும் பாளை முத்தும் ⋆
தலை ஆர்ந்த இளங்கமுகின் ⋆
தடஞ்சோலைத் திருநறையூர் ⋆
மலை ஆர்ந்த கோலம் சேர் ⋆
மணி மாடம் மிக மன்னி ⋆
நிலை ஆர நின்றான் தன் ⋆
நீள் கழலே அடை நெஞ்சே ! ॥ **6.9.8** ॥

மறை ஆரும் பெரு வேள்விக் ⋆
கொழும் புகை போய் வளர்ந்து ⋆
எங்கும் நிறை ஆர வான் மூடும் ⋆
நீள் செல்வத் திருநறையூர் ⋆
பிறை ஆரும் சடையானும் ⋆
பிரமனும் முன் தொழுதேத்த ⋆
இறை ஆகி நின்றான் தன் ⋆
இணை அடியே அடை நெஞ்சே ! ॥ **6.9.9** ॥

‡ திண் கனக மதிள் புடை சூழ் ⋆
திருநறையூர் நின்றானை ⋆
வண் களக நிலவெறிக்கும் ⋆
வயல் மங்கை நகராளன் ⋆
பண் கள் அகம் பயின்ற சீர்ப் ⋆

பாடல் இவை பத்தும் வல்லார் ⋆
விண் கள் அகத்திமையவர் ஆய் ⋆
வீற்றிருந்து வாழ்வாரே ‖ **6.9.10** ‖

## பெரிய திருமொழி – கிடந்த நம்பி

‡ கிடந்த நம்பி குடந்தை மேவிக் ⋆
கேழல் ஆய் உலகை இடந்த நம்பி ⋆
எங்கள் நம்பி ⋆
எறிஞர் அரண் அழிய ⋆
கடந்த நம்பி கடி ஆர் இலங்கை ⋆
உலகை ஈர் அடியால் ⋆
நடந்த நம்பி நாமம் சொல்லில் ⋆
நமோ நாராயணமே ‖ **6.10.1** ‖

விடம் தான் உடைய அரவம் வெருவச் ⋆
செருவில் முன நாள் ⋆
முன் தடந் தாமரை நீர்ப் பொய்கை புக்கு ⋆
மிக்க தாள் ஆளன் ⋆
இடந்தான் வையம் கேழல் ஆகி ⋆
உலகை ஈர் அடியால் ⋆
நடந்தான் உடைய நாமம் சொல்லில் ⋆
நமோ நாராயணமே ‖ **6.10.2** ‖

பூணாதனலும் தறு கண் வேழம் மறுக ⋆
வளை மருப்பைப் ⋆
பேணான் வாங்கி ⋆
அமுதம் கொண்ட பெருமான் திருமார்வன் ⋆
பாணா வண்டு முரலும் கூந்தல் ⋆

ஆய்ச்சி தயிர் வெண்ணெய் ⋆
நாணாதுண்டான் நாமம் சொல்லில் ⋆
நமோ நாராயணமே ‖ **6.10.3** ‖

கல் ஆர் மதிள் சூழ் ⋆
கச்சி நகருள் நச்சிப் ⋆
பாடகத்துள் எல்லா உலகும் வணங்க ⋆
இருந்த அம்மான் ⋆
இலங்கைக் கோன் வல் ஆள் ஆகம் ⋆
வில்லால் முனிந்த எந்தை ⋆
விபீடணற்கு நல்லான் உடைய நாமம் சொல்லில் ⋆
நமோ நாராயணமே ‖ **6.10.4** ‖

குடையா வரையால் ⋆
நிரை முன் காத்த பெருமான் ⋆
மருவாத விடை தான் ஏழும் வென்றான் ⋆
கோவல் நின்றான் ⋆
தென் இலங்கை அடையா அரக்கர் வீயப் பொருது ⋆
மேவி வெம் கூற்றம் ⋆
நடையா உண்ணக் கண்டான் நாமம் ⋆
நமோ நாராயணமே ‖ **6.10.5** ‖

கான எண்கும் குரங்கும் ⋆
முசுவும் படையா ⋆
அடல் அரக்கர் மானம் அழித்து நின்ற ⋆
வென்றி அம்மான் ⋆
எனக்கென்றும் தேனும் பாலும் அமுதும் ஆய ⋆
திருமால் திருநாமம் ⋆

நானும் சொன்னேன் நமரும் உரைமின் ⋆
நமோ நாராயணமே ॥ **6.10.6** ॥

நின்ற வரையும் கிடந்த கடலும் ⋆
திசையும் இரு நிலனும் ⋆
ஒன்றும் ஒழியா வண்ணம் ⋆
எண்ணி நின்ற அம்மானார் ⋆
குன்று குடையா எடுத்த ⋆
அடிகள் உடைய திருநாமம் ⋆
நன்று காண்மின் தொண்டீர் ! சொன்னேன் ⋆
நமோ நாராயணமே ॥ **6.10.7** ॥

கடுங்கால் மாரி கல்லே பொழிய ⋆
அல்லே எமக்கென்று படுங்கால் ⋆
நீயே சரண் என்று ⋆
ஆயர் அஞ்ச அஞ்சா முன் ⋆
நெடுங்கால் குன்றம் குடை ஒன்றேந்தி ⋆
நிரையைச் சிரமத்தால் ⋆
நடுங்கா வண்ணம் காத்தான் நாமம் ⋆
நமோ நாராயணமே ॥ **6.10.8** ॥

பொங்கு புணரிக் கடல் சூழ் ஆடை ⋆
நில மா மகள் மலர் மா மங்கை ⋆
பிரமன் சிவன் இந்திரன் ⋆
வானவர் நாயகர் ஆய ⋆
எங்கள் அடிகள் இமையோர் ⋆
தலைவர் உடைய திருநாமம் ⋆

நங்கள் வினைகள் தவிர உரைமின் ⋆
நமோ நாராயணமே ॥ **6.10.9** ॥

‡ வாவித் தடம் சூழ் மணி முத்தாற்று ⋆
நறையூர் நெடுமாலை ⋆
நாவில் பரவி நெஞ்சில் கொண்டு ⋆
நம்பி நாமத்தை ⋆
காவித் தடங்கண் மடவார் கேள்வன் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
மேவிச் சொல்ல வல்லார் பாவம் ⋆
நில்லா வீயுமே ॥ **6.10.10** ॥

## பெரிய திருமொழி – கறவா மடநாகு

‡ கறவா மட நாகு ⋆
தன் கன்றுள்ளினாற் போல் ⋆
மறவாதடியேன் ⋆
உன்னையே அழைக்கின்றேன் ⋆
நறவார் பொழில் சூழ் ⋆
நறையூர் நின்ற நம்பி ⋆
பிறவாமை எனைப் பணி ⋆
எந்தை பிரானே ! ॥ **7.1.1** ॥

வற்றா முது நீரொடு ⋆
மால் வரை ஏழும் ⋆
துற்றாக முன் துற்றிய ⋆
தொல் புகழோனே ⋆
அற்றேன் அடியேன் ⋆
உன்னையே அழைக்கின்றேன் ⋆

பெற்றேன் அருள் தந்திடு ⋆
என் எந்தை பிரானே ! ‖ **7.1.2** ‖

தாரேன் பிறர்க்கு ⋆
உன் அருள் என்னிடை வைத்தாய் ⋆
ஆரேன் அதுவே ⋆
பருகிக் களிக்கின்றேன் ⋆
காரேய் கடலே மலையே ⋆
திருக்கோட்டி ஊரே ⋆
உகந்தாயை ⋆
உகந்தடியேனே ‖ **7.1.3** ‖

புள் வாய் பிளந்த ⋆
புனிதா ! என்றழைக்க ⋆
உள்ளே நின்று ⋆
என் உள்ளம் குளிரும் ஒருவா ! ⋆
கள்வா ! ⋆
கடல் மல்லைக் கிடந்த கரும்பே ⋆
வள்ளால் ! உன்னை ⋆
எங்ஙனம் நான் மறக்கேனே ‖ **7.1.4** ‖

வில் ஏர் நுதல் ⋆
வேல் நெடுங்கண்ணியும் நீயும் ⋆
கல்லார் கடுங்கானம் ⋆
திரிந்த களிறே ⋆
நல்லாய் ! நர நாரணனே ! ⋆
எங்கள் நம்பி ⋆

சொல்லாய் உன்னை ⋆
யான் வணங்கித் தொழும் ஆறே ॥ **7.1.5** ॥

பனி ஏய் பரங்குன்றின் ⋆
பவளத் திரளே ⋆
முனியே ⋆
திருமூழிக்களத்து விளக்கே ⋆
இனியாய் ! தொண்டரோம் ⋆
பருகின் அமுதாய கனியே ⋆
உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ॥ **7.1.6** ॥

கதியேல் இல்லை ⋆
நின் அருள் அல்லதெனக்கு ⋆
நிதியே ! ⋆
திருநீர்மலை நித்திலத் தொத்தே ⋆
பதியே பரவித் தொழும் ⋆
தொண்டர் தமக்குக் கதியே ⋆
உன்னைக் கண்டு கொண்டு ⋆
உய்ந்தொழிந்தேனே ॥ **7.1.7** ॥

அத்தா ! அரியே ! என்று ⋆
உன்னை அழைக்க ⋆
பித்தா என்று பேசுகின்றார் ⋆
பிறர் என்னை ⋆
முத்தே ! மணி மாணிக்கமே ! ⋆
முளைக்கின்ற வித்தே ⋆

உன்னை எங்ஙனம் நான் ⋆
விடுகேனே ! ‖ **7.1.8** ‖

தூயாய் ! சுடர் மா மதி போல் ⋆
உயிர்க்கெல்லாம் ⋆
தாயாய் அளிக்கின்ற ⋆
தண் தாமரைக் கண்ணா ! ⋆
ஆயா ! அலை நீர் உலகேழும் ⋆
முன் உண்ட வாயா ⋆
உன்னை எங்ஙனம் ⋆
நான் மறக்கேனே ‖ **7.1.9** ‖

‡ வண்டார் பொழில் சூழ் ⋆
நறையூர் நம்பிக்கு ⋆
என்றும் தொண்டாய ⋆
கலியன் ஒலி செய் தமிழ் மாலை ⋆
தொண்டீர் ! இவை பாடுமின் ⋆
பாடி நின்றாட ⋆
உண்டே விசும்பு ⋆
உம் தமக்கில்லை துயரே ‖ **7.1.10** ‖

## பெரிய திருமொழி – புள்ளாய் ஏனமுமாய்

‡ புள்ளாய் ஏனமுமாய்ப் ⋆
புகுந்து ⋆
என்னை உள்ளம் கொண்ட கள்வா ! என்றலும் ⋆
என் கண்கள் நீர்கள் சோர் தருமால் ⋆
உள்ளே நின்றுருகி ⋆
நெஞ்சம் உன்னை உள்ளியக்கால் ⋆

நள்ளேன் உன்னை அல்லால் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.1** ॥

ஓடா ஆள் அரியின் ⋆
உருவாய் மருவி ⋆
என்தன் மாடே வந்து ⋆
அடியேன் மனம் கொள்ள வல்ல மைந்தா ⋆
பாடேன் தொண்டர் தம்மைக் ⋆
கவிதைப் பனுவல் கொண்டு ⋆
நாடேன் உன்னை அல்லால் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.2** ॥

எம்மானும் எம் அனையும் ⋆
என்னைப் பெற்றொழிந்ததற் பின் ⋆
அம்மானும் அம்மனையும் ⋆
அடியேனுக்காகி நின்ற ⋆
நன்மான வொண் சுடரே ! ⋆
நறையூர் நின்ற நம்பீ ! ⋆
உன் மைம் மான வண்ணம் அல்லால் ⋆
மகிழ்ந்தேத்த மாட்டேனே ॥ **7.2.3** ॥

சிறியாய் ஓர் பிள்ளையும் ஆய் ⋆
உலகுண்டோர் ஆல் இலை மேல் உறைவாய் ⋆
என் நெஞ்சின் உள்ளே உறைவாய் ⋆
உறைந்தது தான் ⋆
அறியாதிருந்தறியேன் ⋆
அடியேன் அணி வண்டு கிண்டும் ⋆

நறை வாரும் பொழில் சூழ் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.4** ॥

நீண்டாயை வானவர்கள் ⋆
நினைந்தேத்திக் காண்பரிதால் ⋆
ஆண்டாய் என்றாதரிக்கப் படுவாய்க்கு ⋆
நான் அடிமை பூண்டேன் ⋆
என் நெஞ்சின் உள்ளே ⋆
புகுந்தாயைப் போகல் ஒட்டேன் ⋆
நாண் தாண் உனக்கொழிந்தேன் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.5** ॥

எம் தாதை தாதை அப்பால் ⋆
எழுவர் பழவடிமை வந்தார் ⋆
என் நெஞ்சின் உள்ளே ⋆
வந்தாயைப் போகல் ஒட்டேன் ⋆
அந்தோ ! என் ஆர் உயிரே ! ⋆
அரசே ! அருள் எனக்கு ⋆
நந்தாமல் தந்த எந்தாய் ! ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.6** ॥

மன் அஞ்ச ஆயிரம் தோள் ⋆
மழுவில் துணித்த மைந்தா ⋆
என் நெஞ்சத்துள் இருந்து ⋆
இங்கினிப் போய்ப் பிறர் ஒருவர் ⋆
வன்னெஞ்சம் புக்கிருக்கல் ஒட்டேன் ⋆
வளைத்து வைத்தேன் ⋆

நன்னெஞ்ச அன்னம் மன்னும் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.7** ॥

எப்போதும் பொன் மலர் இட்டு ⋆
இமையோர் தொழுது ⋆
தங்கள் கைப்போது கொண்டிறைஞ்சிக் ⋆
கழல் மேல் வணங்க நின்றாய் ⋆
இப்போதென் நெஞ்சின் உள்ளே ⋆
புகுந்தாயைப் போகல் ஒட்டேன் ⋆
நற்போது வண்டு கிண்டும் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.8** ॥

ஊனேர் ஆக்கை தன்னை ⋆
உழந்தோம்பி வைத்தமையால் ⋆
யான் ஆய் என் தனக்காய் ⋆
அடியேன் மனம் புகுந்த தேனே ! ⋆
தீங்கரும்பின் தெளிவே ! ⋆
என் சிந்தை தன்னால் ⋆
நானே எய்தப் பெற்றேன் ⋆
நறையூர் நின்ற நம்பீயோ ! ॥ **7.2.9** ॥

‡ நன்னீர் வயல் புடை சூழ் ⋆
நறையூர் நின்ற நம்பியை ⋆
கன்னீர மால் வரைத் தோள் ⋆
கலிகன்றி மங்கையர் கோன் ⋆
சொன்னீர சொல் மாலை ⋆
சொல்லுவார்கள் ⋆

சூழ் விசும்பில் நன்னீர்மையால் மகிழ்ந்து ⋆
நெடுங்காலம் வாழ்வாரே ॥ **7.2.10** ॥

## பெரிய திருமொழி – சினவில்

‡ சினவில் செங்கண் அரக்கர் உயிர் மாளச் ⋆
செற்ற வில்லி என்று கற்றவர் தம் தம் மனமுள் கொண்டு ⋆
என்றும் எப்போதும் நின்றேத்தும் மா முனியை ⋆
மரம் ஏழ் எய்த மைந்தனை ⋆
நனவில் சென்றார்க்கும் நண்ணற்கரியானை ⋆
நான் அடியேன் நறையூர் நின்ற நம்பியை ⋆
கனவில் கண்டேன் இன்று கண்டமையால் ⋆
என் கண் இணைகள் களிப்பக் களித்தேனே ॥ **7.3.1** ॥

தாய் நினைந்த கன்றே ஒக்க ⋆
என்னையும் தன்னையே நினைக்கச் செய்து ⋆
தான் எனக்காய் நினைந்தருள் செய்யும் அப்பனை ⋆
அன்றிவ் வையகம் உண்டுமிழ்ந்திட்ட வாயனை ⋆
மகரக் குழைக் காதனை ⋆
மைந்தனை மதிட் கோவல் இடை கழி ஆயனை ⋆
அமரர்க்கரி ஏற்றை ⋆
என் அன்பனை அன்றி ஆதரியேனே ॥ **7.3.2** ॥

வந்த நாள் வந்தென் நெஞ்சிடம் கொண்டான் ⋆
மற்றோர் நெஞ்சறியான் ⋆ அடியேனுடைச் சிந்தை
ஆய் வந்து தென் புலர்க்கென்னைச் சேர் கொடான் ⋆
இது சிக்கெனப் பெற்றேன் ⋆
கொந்துலாம் பொழில் சூழ் குடந்தைத் தலைக் கோவினைக் ⋆
குடம் ஆடிய கூத்தனை ⋆

எந்தையை எந்தை தந்தை தம்மானை ⋆
எம்பிரானை எத்தால் மறக்கேனே ॥ **7.3.3** ॥

உரங்களால் இயன்ற மன்னர் மாளப் ⋆
பாரதத்தொரு தேர் ஐவர்க்காய்ச் சென்று ⋆
இரங்கி ஊர்ந்தவர்க்கின் அருள் செய்யும் எம்பிரானை ⋆
வம்பார் புனல் காவிரி ⋆
அரங்கம் ஆளி என் ஆளி விண் ஆளி ⋆
ஆழி சூழ் இலங்கை மலங்கச் சென்று ⋆
சரங்கள் ஆண்ட தண் தாமரைக் கண்ணனுக்கன்றி ⋆
என் மனம் தாழ்ந்து நில்லாதே ॥ **7.3.4** ॥

ஆங்கு வெம் நரகத்தழுந்தும் போது ⋆
அஞ்சேல் என்றடியேனை அங்கே வந்து தாங்கு ⋆
தாமரை அன்ன பொன்னார் அடி எம்பிரானை ⋆
உம்பர்க்கணியாய் நின்ற ⋆
வேங்கடத்தரியைப் பரி கீறியை ⋆
வெண்ணெய் உண்டுரலின் இடை ஆப்புண்ட தீங்கரும்பினை ⋆
தேனை நன் பாலினை அன்றி ⋆
என் மனம் சிந்தை செய்யாதே ॥ **7.3.5** ॥

எட்டனைப் பொழுதாகிலும் ⋆
என்றும் என் மனத்தகலாதிருக்கும் புகழ் ⋆
தட்டலர்த்த பொன்னே அலர் கோங்கின் ⋆
தாழ் பொழில் திருமாலிருஞ்சோலை அம் கட்டியை ⋆
கரும்பீன்ற இன் சாற்றைக் ⋆
காதலால் மறை நான்கும் முன் ஓதிய பட்டனை ⋆

பரவைத் துயில் ஏற்றை ⋆
என் பண்பனை அன்றிப் பாடல் செய்யேனே ॥ **7.3.6** ॥

பண்ணின் இன் மொழி யாழ் நரம்பில் பெற்ற ⋆
பாலை ஆகி இங்கே புகுந்து ⋆
என் கண்ணும் நெஞ்சும் வாயும் இடம் கொண்டான் ⋆
கொண்ட பின் மறையோர் மனம் தன்னுள் ⋆
விண் உளார் பெருமானை எம்மானை ⋆
வீங்கு நீர் மகரம் திளைக்கும் கடல் வண்ணன் ⋆
மா மணி வண்ணன் எம் அண்ணல் ⋆
வண்ணமே அன்றி வாய் உரையாதே ॥ **7.3.7** ॥

இனி எப்பாவம் வந்தெய்தும் சொல்லீர் ⋆
எமக்கிம்மையே அருள் பெற்றமையால் ⋆
அடும் துனியைத் தீர்த்தின்பமே தருகின்றதோர் ⋆
தோற்றத் தொன்னெறியை ⋆ வையம் தொழப்படும்
முனியை வானவரால் வணங்கப்படும் முத்தினைப் ⋆
பத்தர் தாம் நுகர்கின்றதோர் கனியை ⋆
காதல் செய்தென் உள்ளம் கொண்ட கள்வனை ⋆
இன்று கண்டு கொண்டேனே ॥ **7.3.8** ॥

என் செய்கேன் அடியேன் உரையீர் ⋆
இதற்கென்றும் என் மனத்தே இருக்கும் புகழ் ⋆
தஞ்சை ஆளியைப் பொன் பெயரோன் ⋆
நெஞ்சம் அன்றிடந்தவனைத் தழலே புரை ⋆
மின் செய் வாள் அரக்கன் நகர் பாழ் பட ⋆
சூழ் கடல் சிறை வைத்திமையோர் தொழும் ⋆

பொன் செய் மால் வரையை மணிக் குன்றினை அன்றி ⋆
என் மனம் போற்றி என்னாதே || **7.3.9** ||

‡ தோடு விண்டலர் பூம் பொழில் மங்கையர் தோன்றல் ⋆
வாள் கலியன் திருவாலி நாடன் ⋆
நன்னறையூர் நின்ற நம்பி தன் ⋆
நல்ல மா மலர் சேவடி சென்னியில் ⋆
சூடியும் தொழுதும் எழுந்தாடியும் ⋆
தொண்டர்கட்கவன் சொன்ன சொல் மாலை ⋆
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர் ! பாட ⋆
நும்மிடைப் பாவம் நில்லாவே || **7.3.10** ||

## பெரிய திருமொழி – திருவுக்கும்

பரனே ! பஞ்சவன் பௌழியன் சோழன் ⋆
பார் மன்னர் மன்னர் தாம் பணிந்தேத்தும் வரனே ! ⋆
மாதவனே ! மதுசூதா ! ⋆
மற்றோர் நல் துணை நின் அலால் இலேன் காண் ⋆
நரனே ! நாரணனே ! திருநறையூர் நம்பீ ! ⋆
எம் பெருமான் ! உம்பர் ஆளும் அரனே ⋆
ஆதிவராகம் முன் ஆனாய் ! ⋆
அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே ! || **7.7.4** ||

## பெரிய திருமொழி – தெள்ளியீர்

நீணிலா முற்றத்து ⋆
நின்றிவள் நோக்கினாள் ⋆
காணுமோ ! ⋆
கண்ணபுரம் என்று காட்டினாள் ⋆

பாணனார் திண்ணம் இருக்க ⋆
இனி இவள் நாணுமோ ⋆
நன்று நன்று நறையூரர்க்கே ॥ **8.2.2** ॥

## பெரிய திருமொழி – ஒருநல் சுற்றம்

சுடலையில் ⋆
சுடு நீறன் அமர்ந்ததோர் ⋆
நடலை தீர்த்தவனை ⋆
நறையூர் கண்டு ⋆
என் உடலையுள் புகுந்து ⋆
உள்ளம் உருக்கி உண் ⋆
விடலையைச் சென்று காண்டும் ⋆
மெய்யத்துள்ளே ॥ **10.1.5** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – திருநெடுந்தாண்டகம்

‡ கன்று மேய்த்தினிதுகந்த காளாய் ! என்றும் ⋆
கடி பொழில் சூழ் கணபுரத்தென் கனியே ! என்றும் ⋆
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய் ! என்றும் ⋆
வட திருவேங்கடம் மேய மைந்தா ! என்றும் ⋆
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே ! என்றும் ⋆
விரி பொழில் சூழ் திருநறையூர் நின்றாய் ! என்றும் ⋆
துன்று குழல் கரு நிறத்தென் துணையே என்றும் ⋆
துணை முலை மேல் துளி சோரச் சோர்கின்றாளே ! ॥ **16** ॥

பொங்கார் மெல் இளங்கொங்கை பொன்னே பூப்பப் ⋆
பொரு கயல் கண் நீர் அரும்பப் போந்து நின்று ⋆
செங்கால மடப் புறவம் பெடைக்குப் பேசும் ⋆

சிறு குரலுக்குடல் உருகிச் சிந்தித்து ⋆
ஆங்கே தண் காலும் தண் குடந்தை நகரும் பாடித் ⋆
தண் கோவலூர் பாடி ஆடக் கேட்டு ⋆
நங்காய் ! நம் குடிக்கிதுவோ நன்மை என்ன ⋆
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே ! ‖ **17** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

மற்றெனக்கிங்
காரானும் கற்பிப்பார் நாயகரே ⋆
நான் அவனைக் காரார் திருமேனி காணும் அளவும் போய் ⋆
‡ சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே ⋆
மதிட்கச்சி ஊரகமே பேரகமே ⋆
பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே ⋆
பேராலி தண்கால் நறையூர் திருப்புலியூர் ⋆
‡ ஆராமம் சூழ்ந்த அரங்கம் ‖ **36** ‖

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – பெரிய திருமடல்

பாவியேற் -
கென்னுறு நோய் யான் உரைப்பக் கேண்மின் ⋆
இரும் பொழில் சூழ் மன்னு மறையோர் திருநறையூர் மாமலை
போல் ⋆ பொன் இயலும் மாடக் கவாடம் கடந்து புக்கு ⋆
என்னுடைய கண் களிப்ப நோக்கினேன் ‖ **43** ‖

நான் வணங்கும்
கண்ணனைக் கண்ணபுரத்தானை ⋆
தென் நறையூர் மன்னு மணி மாடக் கோயில் மணாளனை ⋆
கல் நவில் தோள் காளையைக் கண்டாங்குக் கை தொழுது ⋆

என் நிலைமை எல்லாம் அறிவித்தால் எம் பெருமான் ⋆
தன் அருளும் ஆகமும் தாரானேல் ॥ **73** ॥

**திரு வஞ்சுளவல்லி சமேத திருநறையூர் நம்பி திருவடிகளே சரணம்**